தினமணி Fri, 24 June 2016
epaper.dinamani.com/c/11232815

# பள்ளி மாணவர்களுக்கான வானியல் செய்முறைப் பயிற்சி

**சென்னை, ஜூன் 23:** கோடைக் காலத்தின் உச்சத்தில் பகல் நேரம் அதிகமுள்ள நாளில் புவியின் சுற்றளவைக் கண்டறியும் முறை குறித்து பள்ளி மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சி அண்மையில் நடத்தப்பட்டது.

மயிலாப்பூர் வித்யா மந்திர் சீனியர் செகண்டரி பள்ளி, சேத்துப்பட்டு சென்னை கிறிஸ்டியன் கல்லூரி மேல்நிலைப்பள்ளி ஆகிய இரு பள்ளிகளில் ஸ்பேஸ் டெக்னாலஜி, கல்வி நிறுவனம் ஆகியன சார்பில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இதில் மாணவர்கள் சூரியனின் நிழலைப் பதிவு செய்ததுடன், சூரியனின் கோணம், எளிய கணித உத்திகளைக் கொண்டும் புவியின் சுற்றளவையும் கண்டறிந்தனர்.

நிகழ்ச்சிகளில் ஸ்பேஸ் மண்டல மேலாளர் எஸ்.வேங்கடநாராயணன், வானியல் கல்வியாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமணி Fri, 24 June 2016
epaper.dinamani.com/c/11232602